## நவம்பர் – 15 – புதன்

### புனித பெரிய அல்பேட்

### நீங்கள் தெய்வங்கள்: நீங்கள் எல்லாரும் உன்னதரின் புதல்வர்கள். திபா. 82:6

### முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் : 6 : 1 - 11

மன்னர்களே, நான் சொல்வதற்குச் செவிசாய்த்துப் புரிந்து கொள்ளுங்கள் உலகின் கடையெல்லைவரை நீதி வழங்குவோரே, கற்றுக்கொள்ளுங்கள். திரளான மக்களை ஆள்வோரே, பல மக்களினங்களைப் பற்றிப் பெருமை பாராட்டுவோரே, எனக்குச் செவிசாயுங்கள். ஆண்டவரிடமிருந்தே உங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது உன்னத இறைவனிடமிருந்தே உங்களுக்கு ஆட்சியுரிமை கிடைத்தது. அவரே உங்கள் செயல்களைச் சோதித் தறிபவர் உங்கள் திட்டங்களை ஆராய்பவரும் அவரே. அவரது அரசின் பணியாளர்களாய் இருந்தும், நீங்கள் நேர்மையுடன் தீர்ப்பு வழங்கவில்லை திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை கடவுளின் திருவுளப்படி நடக்கவில்லை. கொடுமையாகவும் விரைவாகவும் அவர் உங்கள்மேல் வருவார் உயர் நிலையில் உள்ளவர் களுக்குக் கடும் தீர்ப்பு வழங்குவார். எளியோர்க்கு இரக்கங்காட்டி அவர்களைப் பொறுத்தருள்வார் வலியோரை வன்மையாகத் தண்டிப்பார். அனைத்திற்கும் ஆண்டவர் யாருக்கும் அஞ்சி நடுங்க மாட்டார் உயர்ந்தோர்க்கென்று தனி மதிப்பு அளிக்கமாட்டார். ஏனெனில் பெரியோரையம் சிறியோரையம் படைத்தவர் அவரே எல்லாரும் ஒன்றென எண்ணிக் காப்பவரும் அவரே. அவர் வலியோரிடம் கண்டிப்பான கணக்குக் கேட்பார். எனவே, மன்னர்களே, நீங்கள் ஞானத்தைக் கற்றுக் கொள்ளவும், நெறிபிறழாது நடக்கவும், உங்களுக்கு நான் கூறுகிறேன் தூய்மையானவற்றைத் தூய்மையாய்க் கடைப்பிடிப்போர் தூயோர் ஆவர் தூய்மையானவற்றைக் கற்றுக்கொண்டார் தங்கள் செயல்களை முறைப்படுத்த வழி காண்பர். எனவே என் சொற்கள்மீது நாட்டங் கொள்ளுங்கள் ஏக்கங் கொள்ளுங்கள். நீங்கள் அவற்றால் நற்பயிற்சி பெறுவீர்கள்.

**பதில்பாடல் :** கடவுளே உலகில் எழுந்தருளும் உலகில் நீதியை நிலைநாட்டும்

### நற்செய்தி : லூக்கா 17 : 11 – 19

அக்காலத்தில் இயேசு எருசலேமுக்குப் போய்க் கொண்டிருந்த போது கலிலேய, சமாரியப் பகுதிகள் வழியாகச் சென்றார். ஓர் ஊருக்குள் வந்த பொழுது, பத்து தொழுநோயாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து, தூரத்தில் நின்று கொண்டே, "ஐயா! இயேசுவே, எங்களுக்கு இரங்கும்" என்று உரக்கக் குரலெழுப்பி வேண்டினார்கள். அவர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் போய் உங்களைக் குருக்களிடம் காண்பியுங்கள்" என்றார். அவ்வாறே அவர்கள் புறப்பட்டுப் போகும்போது அவர்கள் நோய் நீங்கிற்று. அவர்களுள் ஒருவர் தம் பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்த குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார் அவருடைய காலில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். அவரோ ஒரு சமாரியர். இயேசு, அவரைப் பார்த்து, "பத்துப் பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே? கடவுளைப் போற்றிப் புகழ அன்னியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணோமே!" என்றார். பின்பு அவரிடம், "எழுந்து செல்லும், உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு பத்து தொழு நோயாளர்களைக் குணப்படுத்துகிறார். ஆனால் பத்துப்பேரின் தொழுநோயை ஆண்டவர் இயேசு போக்கி இருந்தாலும் சமாரியன் ஒருவன் மட்டும் தான் அவருக்கு நன்றி செலுத்த வருகிறான். மற்ற ஒன்பது பேரும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தாமல் தங்களுடைய வழியில் செல்கிறார்கள். நன்றி சொல்லுதல் என்பது நாம் கடவுளிடமிருந்து எவ்வளவு பெற்றிருக்கிறோம் என்பதல்ல, மாறாக பெற்றுக் கொண்டதை எப்படி நிறைவாகப் பார்க்கிறோம் என்பதில் தான உண்மையான அர்த்தம் அடங்கி இருக்கிறது. அந்த வித த்தில் சமாரியன் ஒருவனைத்தவிர மற்ற ஒன்பது பேரும் நிறைவில்லாதவர்களாக தங்களுடைய இல்லம் செல்கின்றார்கள். இங்கே அவர்களுக்கு நற்சுகம் இயேசுவின் இறை இரக்கத்தின் செயலாகும். இறைவனின் இரக்கம் இயேசு வழியாக நன்றி மனப்பான்மையை கொணர வேண்டும். இறைவனின் இரக்கம் இயேசு வழியாக செயல்படுத்தப்பட்டது. இயேசுவின் அருகில் செல்வது இயேசுவில் முழு நம்பிக்கை வைப்பதற்குசமன். உலக சத்திகள் மனிதர்கள் நம்மை இறைவனிடம் இருந்து தூரப்படுத்தினாலும் நம்பிக்கையால் நாம் இறைவனின் உடனிருப்பை உணரலாம். சமூகத்தின் விளிம்பில் உள்ளவர்களும், புறம் தள்ளப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களுமே இயேசுவுக்கு நெருக்கமானவர்கள் என்பதை உணர்ந்து வாழ்வோம்.